**ஜூலை – 17**

# TNPSC துளிகள்

- மத்தியப் பிரதேசத்தின் ஷியோபூரில் உள்ள வான்வழி விநியோக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (ADRDE) வான்வழி வீச்சுப் பகுதியில் ககன்யான் G1 திட்டத்திற்கான ஒருங்கிணைந்த முக்கிய பாராசூட் வான்வழி வீச்சுச் சோதனையை (IMAT-05) இஸ்ரோ வெற்றிகரமாக நடத்தியது.
- ராஜஸ்தானின் உதய்பூரில் உள்ள உபேஷ்வர் வனவிலங்குப் பகுதியில் சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு அரிய வகை லௌடங்கியா கொடிப்பாம்பு (அஹேதுல்லா லௌடங்கியா) ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியாவின் முதல் அரசு சார்ந்த செயற்கை நுண்ணறிவு (AI) பல்கலைக்கழகத்தை பெங்களூரில் நிறுவுவதற்கான திட்டத்தை கர்நாடகா அறிவித்துள்ளது.
- விவசாயம், போக்குவரத்து, வாழ்வாதாரம், விளையாட்டு, சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் விலங்குகள் உதவி சிகிச்சை ஆகியவற்றில் குதிரைகளின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் உலக குதிரைகள் தினம் ஆண்டுதோறும் ஜூலை 11 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- கூட்டு நடவடிக்கையின் மூலம் அமைதி, கண்ணியம், சகிப்புத்தன்மை, சமூக நிலைத்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றை ஊக்குவிப்பதன் மூலம் நம்பிக்கையை உலகளாவிய மதிப்பாக மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 12 அன்று சர்வதேச நம்பிக்கை தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Building Collective Resilience, Teaching Hope, and Using It to Advance Global Sustainable Development Goals (SDGs)" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்


## நலம் TN பொதுச் சேவை இணையதளம்




- தமிழ்நாடு அரசு 'நலம் TN' என்ற ஒருங்கிணைந்த டிஜிட்டல் பொது சுகாதார சேவை இணையதளத்தை சென்னையில் அறிமுகப்படுத்தியது.

- இந்த இணையதளம் நோயாளிகள், மருத்துவமனைகள் மற்றும் பொது சுகாதார நிறுவனங்களுக்கான அரசு சுகாதார சேவைகளை ஒருங்கிணைக்கும் ஒரு ஒற்றை டிஜிட்டல் தளமாகும்.
- இது சுகாதாரச் சேவைகளுக்கான இணையவழி அணுகல், மருத்துவமனை ஒருங்கிணைப்பு மற்றும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் அரசு மருத்துவ மனைகளுக்கு நேரடிப் பங்களிப்புகளைச் செய்வதற்கான கண்காணிக்கப்பட்ட அமைப்பு ஆகியவற்றைச் செயல்படுத்துகிறது.
- இந்த இணையதளம் மாநிலத்தின் டிஜிட்டல் சுகாதார அமைப்பை வலுப்படுத்துவதோடு, வெளிநோயாளர் (OP) முன்பதிவு செய்யப் பயன்படும் வாட்ஸ்அப்/புலனம் அடிப்படையிலான சாட்போட் ஆன NalamAI அமைப்பை நிறைவு செய்கிறது.
- அணுகக்கூடிய, வெளிப்படையான மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான தமிழ்நாட்டின் முயற்சியின் ஒரு பகுதியாக மாநில சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையால் இது தொடங்கப்பட்டது.

## துக்காச்சி கோவில் - யுனெஸ்கோ அங்கீகாரம்





- தமிழ்நாட்டின் தஞ்சாவூர் மாவட்டம், துக்காச்சியில் உள்ள 12-ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆபத்சகாயேஸ்வரர் கோயிலானது, பாரம்பரியப் பாதுகாப்பிற்கான யுனெஸ்கோவின் ஆசிய-பசிபிக் சிறப்பு விருதைப் (2024) பெற்றுள்ளது.
- இந்தக் கோயில் முதலாம் குலோத்துங்கன் மற்றும் விக்கிரம சோழனுடன் தொடர்பு உடைய பிற்கால சோழர் கால நினைவுச் சின்னமாகும் என்பதுடன் மேலும் இது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு வாழும் கோயிலாகும்.
- இது கோயிலின் கருவறை ஒரு ஊர்வலத் தேர் போல வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு அரிய கரகக் கோவில் கட்டிடக்கலையைக் கொண்டுள்ளது.
- இந்த மறுசீரமைப்புப் பணியில் ஆளில்லா விமான ஆய்வுகள், டிஜிட்டல் வரைபடம் மற்றும் அனஸ்டிலோசிஸ் நுட்பங்களைப் பயன்படுத்தி கிரானைட் கற்கள் கவனமாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் அசல் நிலைகளிலேயே மீண்டும் கட்டப்பட்டன.

- இந்த ₹5 கோடி மதிப்பிலான பாதுகாப்புத் திட்டமானது பாரம்பரிய ஸ்தபத்ய வேதம் மற்றும் ஆகம சாஸ்திரக் கொள்கைகளை நவீன பொறியியல் முறைகளுடன் ஒருங்கிணைத்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் UNSC 2028-29 பிரச்சாரம்




- 2028-29 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் (UNSC) நிரந்தரமற்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தனது பிரச்சாரத்தை இந்தியா அதிகாரப் பூர்வமாகத் தொடங்கியுள்ளது.
- வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் இந்தியாவின் 'SHANTI' தொலைநோக்குப் பார்வையை (நெறிமுறைகள், நம்பிக்கை மற்றும் நேர்மை ஆகியவற்றின் மூலம் முழுமையான முன்னேற்றத்தை உறுதி செய்தல்) நியூயார்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் வெளியிட்டார்.
- ஐ.நா அமைப்பு உருவாக்கப்பட்டதிலிருந்து சுமார் 50 ஐ.நா அமைதி காக்கும் பணிகளுக்கு இந்தியா சுமார் 3 லட்சம் வீரர்களை அளித்துள்ளது.
- இந்தியா தற்போது 10 ஐ.நா அமைதி காக்கும் பணிகளில் 4,300க்கும் மேற்பட்ட வீரர்களைக் கொண்டுள்ளது.
- நிரந்தரமற்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், இந்தியா இரண்டு ஆண்டு காலத்திற்குச் சேவை செய்யும் என்பதோடு மேலும் இதற்கு முன்னர் எட்டு முறை UNSC-இன் நிரந்தரமற்ற உறுப்பினராக பணியாற்றியதைத் தொடர்ந்து இதில் இணையும்.

## இந்தியா-இங்கிலாந்து CETA புதுப்பிப்பு

- இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துவதற்காக இந்தியா-

ஐக்கியப் பேரரசு (UK) ஆகியவற்றின் விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (CETA) நடைமுறைக்கு வந்தது.

- CETA இங்கிலாந்திற்கான இந்தியாவின் ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 99% க்கு சுங்க வரியற்ற அணுகலை வழங்குகிறது என்பதுடன் இது வர்த்தக மதிப்பில் கிட்டத்தட்ட 100% ஐ உள்ளடக்கியது.
- ஜவுளி, விவசாயம், மீன்வளம், பொறியியல் பொருட்கள், மருந்துகள், சேவைகள் மற்றும் உற்பத்தி போன்ற துறைகளில் சந்தை அணுகலை இந்த ஒப்பந்தம் மேம்படுத்துகிறது.
- இது இந்தியா மற்றும் இங்கிலாந்து இடையே டிஜிட்டல் வர்த்தகம், தொழில்முறை இயக்கம், கண்டுபிடிப்பு மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவிக்கிறது.
- இந்த ஒப்பந்தத்தில் சேவைகள் வர்த்தகம், தொழில்முறை தகுதிகளுக்கான பரஸ்பர அங்கீகாரம் மற்றும் திறமையான நிபுணர்களின் எளிதான நகர்வு ஆகியவற்றுக்கான கட்டுப்பாடுகள் அடங்கும்.




## கோடெக்ஸ் உணவுத் தரநிலைகள் - இந்தியா




- ஜெனீவாவில் நடைபெற்ற கோடெக்ஸ் அலிமென்டரியஸ் ஆணையத்தின் (CAC49) 49வது அமர்வின் போது ஏழு கோடெக்ஸ் தரநிலைகளை ஏற்றுக்கொள்வதற்கு இந்தியா தலைமை தாங்கியது.
- கோடெக்ஸ் அலிமென்டரியஸ் ஆணையம் என்பது உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO) ஆகியவற்றின் கூட்டு அமைப்பு

ஆகும்.

- காய்ந்த கொத்தமல்லி விதைகள் மற்றும் புதிய கறிவேப்பிலை ஆகிய இரண்டு தரநிலைகள் இந்தியாவின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டன.
- ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற தரநிலைகள் வெண்ணிலா, பெரிய ஏலக்காய், உணவு பதப்படுத்தும் நீர் பாதுகாப்பு, கோழி உணவு வகைப் பாதுகாப்பு மற்றும் உணவு அடையாளமிடுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- முந்திரிப் பருப்புக்கான கோடெக்ஸ் தரநிலையை உருவாக்குவதற்கான இந்தியாவின் முன்மொழிவும் அங்கீகரிக்கப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## ஐரோப்பிய எறிகணைத் தடுப்புக் கூட்டணி

- பகிரப்பட்ட எறிகணைப் பாதுகாப்பு அமைப்பை உருவாக்க, ஒன்பது ஐரோப்பிய நாடுகளும் உக்ரைனும் இணைந்து பிரான்சின் பாரிஸில் ஒருங்கிணைந்த உந்துவிசை எதிர்ப்பு எறிகணை கூட்டணியை அமைத்தன.
- டென்மார்க், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, நார்வே, ஸ்பெயின், ஸ்வீடன், உக்ரைன் மற்றும் ஐக்கிய பேரரசு ஆகியவை இதன் நிறுவன உறுப்பினர்களில் அடங்கும்.
- கூட்டு ஆராய்ச்சி, தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டமிடல் ஆகியவற்றின் மூலம் உந்துவிசை எறிகணை தடுப்புத் திறன்களை உருவாக்குவதை இந்தக் கூட்டணி நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முயற்சியானது பேட்ரியாட் (Patriot) அமைப்பிற்கு செலவு குறைந்த மாற்றாக, ஃபயர் பாயிண்ட் (Fire Point) நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட உக்ரைனின் ஃப்ரேயா (Freyja) உந்துவிசை எதிர்ப்பு அமைப்பில் கவனம் செலுத்துகிறது.
- உந்துவிசை எறிகணைப் பாதுகாப்பு அமைப்பு உள்வரும் உந்துவிசை எறிகணைகளைக் கண்டறிந்து அழிக்க உணரிகள், கட்டுப்பாட்டு வலையமைப்புகள் மற்றும் இடைமறிப்பு அமைப்புகளைப் பயன்படுத்துகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவின் உள்நாட்டு கண்காணிப்பு வான்வெளிக்கப்பல்கள்

- உள்நாட்டில் அதிக நேரம் தாக்குப் பிடிக்கும் கண்காணிப்பு வான்வெளிக் கப்பல்களுக்காக, வான்வெளிக்கப்பல் அடிப்படையிலான 'அதி-உயர போலி

செயற்கைக் கோள்' (AS-HAPS) திட்டத்தை இந்தியா அறிமுகப்படுத்தியது.

- இந்த ₹15,000 கோடி மதிப்பிலான திட்டமானது எல்லைக் கண்காணிப்பு, நுண்ணறிவு, கண்காணிப்பு மற்றும் உளவு (ISR) மற்றும் தகவல் தொடர்புத் திறன்களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அதி-உயர போலி செயற்கைக்கோளானது (HAPS) அடுக்குமண்டலத்தில் (20-30 கிமீ உயரம்) செயல்படுகின்றன என்பதோடு இவை மாதக்கணக்கில் காற்றில் பறக்கக் கூடியவை.
- இந்த வான்வெளிக்கப்பல்கள் ரேடார்கள், ஒளியியல் கண்காணிப்பு அமைப்புகள், மின்னணு உளவுத் தகவல் சாதனங்கள் மற்றும் தகவல் தொடர்பு உபகரணங்களை எடுத்துச் செல்ல முடியும்.
- இந்திய விமானப்படை மற்றும் தனியார் துறையின் ஆதரவுடன், மேக்-I (Make-I) கொள் முதல் கட்டமைப்பின் கீழ் இத்திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## அலையாத்தி காடுகள் மறுசீரமைப்புத் தரநிலைகள்

- இந்தியத் தர நிர்ணய அமைப்பு (BIS), "அலையாத்தி காடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பை மீட்டெடுத்தல் — வழிகாட்டுதல்கள்" என்ற தலைப்பில் அலையாத்தி காடுகள் சுற்றுச்சூழல் அமைப்பை மீட்டெடுப்பதற்கான இந்தியாவின் முதல் தர நிலையை தயாரித்து வருகிறது.
- இந்த வரைவுத் தரநிலையானது, இந்தியாவின் பல்வேறு கடலோரப் பகுதிகளில் உள்ள அலையாத்தி காடுகளின் சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குகிறது.
- அலையாத்தி காடுகள் என்பவை இடைப்பட்டகழி மண்டலங்கள், முகத்துவாரங்கள்,

டெல்டாக்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் உப்புத் தன்மையை தாங்கி வளரக்கூடிய கடலோரக் காடுகள் ஆகும்.

❖ ஒருங்கிணைந்த மறுசீரமைப்புத் தரநிலையை உருவாக்குவதற்காக 2023 ஆம் ஆண்டில் BIS குழுவால் EED 06: WG 02 உருவாக்கப்பட்டது.

❖ இந்தத் தரநிலையானது மரம் நடுதல் முறைகள், மக்கும் பைகளைப் பயன்படுத்துதல் மற்றும் உள்ளூர் சமூகங்களை ஈடுபடுத்துதல் போன்ற பரிந்துரைகளை உள்ளடக்கி உள்ளது.

❖ MISHTI (கடலோர வாழ்விடங்கள் மற்றும் உறுதியான வருமானத்திற்கான சதுப்புநில முன்னெடுப்பு) திட்டம் இந்தியாவின் கடலோர மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் அலையாத்தி காடுகளை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## செயற்கை நுண்ணறிவு (AI) குறித்த ஐநா அறிக்கை

❖ ஐக்கிய நாடுகள் சபையானது (UN) செயற்கை நுண்ணறிவு (AI) குறித்த தனது முதல் அறிவியல் மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது, இது உலகளாவிய நடவடிக்கை மற்றும் நிர்வாகத்தின் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.


❖ இந்த அறிக்கை யோசுவா பெஞ்சியோ மற்றும் மரியா ரெசா ஆகியோரை இணைத் தலைவர்களாகக் கொண்ட, 40 உறுப்பினர்களைக் கொண்ட செயற்கை நுண்ணறிவுக்கான சுதந்திரமான சர்வதேச அறிவியல் தயாரிக்கப்பட்டது.

❖ இது சுகாதாரம், கல்வி, விவசாயம், பொருளாதாரம், பாதுகாப்பு, சுற்றுச்சூழல், மனித உரிமைகள் மற்றும் நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள AI முன்னேற்றங்களை ஆராய்ந்தது.

❖ தற்போதைய பாதுகாப்பு விதிகள் மற்றும் உலகளாவிய ஆளுகை முறைகளை விட AI தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மிக வேகமாக முன்னேறி வருகிறது என்று இந்த அறிக்கை எச்சரித்துள்ளது.

❖ இது உலகளாவிய AI கணினித் திறனில் அமெரிக்கா (US) சுமார் 75% மற்றும் சீனா சுமார் 15% பங்கைக் கொண்டிருப்பதன் மூலம் நிலவும் 'AI கணினித் திறன் இடைவெளியை' சுட்டிக் காட்டியுள்ளது.

- ❖ கணினி உள்கட்டமைப்பு, மேம்பட்ட சில்லுகள் மற்றும் தரமான தரவுகள் இல்லாத நாடுகள், ஒரு சில முன்னணி AI நாடுகள் மற்றும் நிறுவனங்களைச் சார்ந்து இருக்க நேரிடும் என்று இந்த அறிக்கை கூறுகிறது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஞானபீட விருது - ஆர். வைரமுத்து




- ❖ தமிழ் கவிஞரும், பாடலாசிரியரும், எழுத்தாளருமான ஆர். வைரமுத்துவுக்கு புது தில்லியில் 60-வது ஞானபீட விருது (2025) வழங்கப்பட்டது.
- ❖ அகிலன் (1975) மற்றும் ஜெயகாந்தன் (2002) ஆகியோருக்குப் பிறகு, 24 ஆண்டு கால இடைவெளிக்குப் பின் இந்த விருதைப் பெறும் மூன்றாவது தமிழ் இலக்கிய ஆளுமை இவராவார்.
- ❖ அவர் தனது 'கள்ளிக்காட்டு இதிகாசம்' புதினத்திற்காக 2003 ஆம் ஆண்டில் சாகித்ய

அகாடமி விருதைப் பெற்றார்.

- 1961 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஞானபீட விருது இந்தியாவின் மிக உயர்ந்த இலக்கிய விருதாகும் என்பதுடன் அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் பட்டியலிடப் பட்டுள்ள எந்தவொரு மொழியிலும் இலக்கியத்திற்கான வாழ்நாள் பங்களிப்பிற்காக இது ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது.
- இந்திய மொழிகள், இலக்கியம் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்காக 1944 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 'பாரதிய ஞானபீடம்' என்ற அமைப்பால் இந்த விருது வழங்கப்படுகிறது.
- இந்த விருது ₹11 லட்சம் ரொக்கப் பரிசு, வாக்தேவி தேவியின் வெண்கலச் சிலை மற்றும் பாராட்டுப் பத்திரம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

# முக்கிய தினங்கள்

## 1995-ஆம் ஆண்டில் ஸ்ரெப்ரெனிகாவில் நடந்த இனப்படுகொலை பற்றிய சர்வதேச நினைவேந்தல் மற்றும் இரங்கல் தினம் 2026 – ஜூலை 11

- இத்தினம் போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவில் 8,000-க்கும் மேற்பட்ட போஸ்னியாக் (போஸ்னிய முஸ்லிம்கள்) ஆண்கள் மற்றும் சிறுவர்கள் கொல்லப்பட்ட 1995-ஆம் ஆண்டின் ஸ்ரெப்ரெனிகா இனப்படுகொலையை நினைவு கூர்கிறது.
- இத்தினம் 2024 ஆம் ஆண்டு மே 23 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் மூலம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் (UNGA) நிறுவப்பட்டது.
- 1995 ஆம் ஆண்டு ஸ்ரெப்ரெனிகா இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களை கௌரவிக்கவும், நினைவேந்தல், நீதி மற்றும் இனப்படுகொலை தடுப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கவும் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 11 அன்று இது அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தீர்மானம் இனப்படுகொலை மறுப்பு மற்றும் வரலாற்றுத் திருத்தல்வாதத்தை நிராகரிக்கிறது என்பதுடன் மேலும் எதிர்கால அட்டூழியங்களைத் தடுக்க கல்வி மற்றும் விழிப்புணர்வை ஊக்குவிக்கிறது.
- சர்வதேச நீதிமன்றம் (ICJ) மற்றும் முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் (ICTY) ஆகியவை 1995 ஆம் ஆண்டு ஸ்ரெப்ரெனிகா கொலைகளை இனப்படுகொலை என்று தீர்ப்பளித்துள்ளன.





## சர்வதேச மலாலா தினம் 2026 – ஜூலை 12

- பெண் கல்வி மற்றும் மனித உரிமைகளுக்காக மலாலா யூசுப்சாய் மேற்கொண்ட பிரச்சாரத்தை கௌரவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மலாலா யூசுப்சாயின் பிறந்தநாளான ஜூலை 12 அன்று இது ஆண்டுதோறும்

அனுசரிக்கப் படுகிறது என்பதுடன் இது 2013 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் (UN) அறிவிக்கப்பட்டது.

- உலகெங்கிலும் உள்ள குழந்தைகளுக்கு, குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு இலவச, பாதுகாப்பான மற்றும் தரமான கல்விக்கான உரிமையை இந்த நாள் ஊக்குவிக்கிறது.
- பெண் கல்விக்கு விதிக்கப்பட்ட தடைக்கு எதிராகப் பேசியதற்காக 2012-ஆம் ஆண்டில் நடந்த தாக்குதலில் இருந்து தப்பிய பிறகு, மலாலா கல்வி உரிமைகளுக்கான உலகளாவிய அடையாளமாக மாறினார்.
- மலாலா மிக இளைய வயதில் நோபல் அமைதிப் பரிசு பெற்றவர் ஆவார் என்பதோடு அவர் 2014 ஆம் ஆண்டில் தனது 17 வயதில் இந்த விருதைப் பெற்றார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★